டென்மார்க் தமிழர் பேரவை
Dansk Tamilsk Forum
Denmark Tamils Forum

v/Santhos Manokaran
Fredensgade 1. st.
6000 Kolding
CVR.nr.: 32610447

Tlf.: +4552173671 telefon tid: 10-12 og 19-22
Web: www.dansktamilskforum.dk
Mail: forum@dansktamilskforum.dk
**Bank:**
Sparekassen:Reg.nr.: 9690 Konto: 0000591807

**Billund d. 4. februar 2010**

# சிங்களத்தின் சுதந்திரதினமும் தமிழர்களுக்கு கரிநாளுமான பெப்ரவரி 4ம் நாள் அறிக்கை.

இறுதியாகப் பிரித்தானியரிடம் இருந்து தங்களின் சுதந்திரத்தை மீளப்பெற்றுக்கொண்ட சிங்கள தேசம் அதே நாளில் தமிழரின் தாயகத்தை வன்பறிப்பு செய்தது. அன்று முதல் சிங்களத்திடம் தாம் இழந்த இறைமையை மீளப்பெறப் போராடும் தமிழினம், சிங்கள தேசத்தின் இறைமையை நசுக்க என்றும் முற்பட்டதல்ல. மாறாக சிங்களதேசமே தமிழினத்தை முற்றாக இலங்கைத்தீவில் இருந்து வேரறுக்கவே முற்பட்டது.

சிங்கள இனவாதிகளினால் வசைப்படுத்தப்பட்டுள்ள சிங்களமக்களும் தமிழினத்தின் மீது இனப்படுகொலையைக் கூடுதலாகப் புரிவோரையே தமது அரசியல் தலைமையாகத் தொடர்ந்து தெரிவுசெய்துவருகின்றனர். சிங்கள தேசத்தால் அண்மையில் நடாத்தப்பட்ட சனாதிபதி தேர்தலும் அதனையே சுட்டிக்காட்டுகின்றது.

தமிழின அழிப்பை தனது அரசியலாக்கியுள்ள சிங்களதேசம், குடும்ப அரசியலில் சிக்கித் தனது தேசத்தையும் அழிவுப்பாதையில் இட்டுச்செல்கின்றது என்பதை சிங்கள மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். தமிழினத்தை அடிமையாக்கிக்கொண்டு சிங்கள தேசம் என்றுமே தனது தேசத்தை வளர்ச்சிப்பாதையில் இட்டுச்செல்லமுடியாது. இது வரலாறுப்பாடம்.

தமிழர்களால் சிங்கள அப்பாவிகள்மீது எவ்வித நாசகாரத் தாக்குதல்களும் இடம்பெறாதபோதும் சிங்கள இனம் தன்னை வளர்த்துக்கொள்ளமுடியவில்லை. சிங்களப் பேரினவாதிகள் மட்டுமே தம்மை வளர்த்துக்கொண்டார்கள். தமிழர்கள் மீது அனைத்துலகத்தால் தடைசெய்யப்பட்ட படைக்கருவிகள்கொண்டு சிங்களப்படைகள் இனவழிப்பில் ஈடுபட்டபோது சிங்களமக்கள் கைகட்டி வாய்மூடி இருந்ததுடன் தமிழர் அழிவை விழாவாகக் கொண்டாடினர்.

சிங்கள இனத்தின் பொருளாதார வளர்ச்சிகூட தமிழினம் தனது இறைமையை மீளப்பெறுவதிலேயே தங்கியுள்ளது என்பதை சிங்கள தேசம் புரிந்துகொள்ளவேண்டும்.

சிங்களதேசம் பெற்றுக்கொண்ட சுதந்திரத்தைத் தமிழர் என்றும் புறக்கணிக்கவில்லை என்பதையும், மாறாகச் சிங்களதேசம் தான்பெற்ற சுதந்திரத்தின்மூலம் தமிழர் தேசத்தை வன்பறிப்புச் செய்ததையே கண்டிக்கின்றனர் என்பதையும் சிங்கள மக்களும் அனைத்துலகமும் புரிந்துகொள்ளவேண்டும்.

அனைத்துலக குமூகம் தமிழ்பேசும் மக்களின் சனநாயக முடிவுகளை மதித்து, அவர்களுக்கு உதவிடவேண்டும். மாறாக தமது நலன்கள் சார்ந்து எந்தவொருமுடிவுகளையும் தமிழ்மக்கள்மீது திணிக்கக்கூடாது. உதாரணமாக 1987ம் ஆண்டு இந்திய அரசு தனது நலன் சார்ந்து தமிழர்கள் மீது திணிக்க முற்பட்ட தீர்வு பல கசப்பான முடிவுகளையே ஏற்படுத்தியது. 2001 ம் ஆண்டு முதல் அனைத்துலக குமூகத்திற்கும் குருட்டுத்தனமான மதவாத பயங்கரவாதத்திற்கும் இடையே ஏற்பட்ட யுத்தத்தைத் தொடர்ந்து அனைத்துலக குமூகம் நியாயமான விடுதலைப் போராட்டத்திற்கும் குருட்டுத்தனமான மதவாத பயங்கரவாதத்திற்கும் இடையிலான வேறுபாட்டை இனங்காண மறுத்தே வருகின்றது.

2001 ம் ஆண்டு அனைத்துலக குமூகம் பயங்கரவாதத்திற்கு எதிரான போரை ஆரம்பிப்பதற்கு முன்னரே இராணுவப்பலத்தில் முன்னோக்கி நின்ற தமிழர் விடுதலைப் போராட்ட அமைப்பு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதற்கான முயற்சியில் ஈடுபட்டது.

டென்மார்க் தமிழர் பேரவை
Dansk Tamilsk Forum
Denmark Tamils Forum

v/Santhos Manokaran
Fredensgade 1. st.
6000 Kolding
CVR.nr.: 32610447

Tlf.: +4552173671 telefon tid: 10-12 og 19-22
Web: www.dansktamilskforum.dk
Mail: forum@dansktamilskforum.dk
**Bank:**
Sparekassen:Reg.nr.: 9690 Konto: 0000591807

**Billund d. 4. februar 2010**

இதன் விளைவாக 2002 ம் ஆண்டு முதல் இலங்கைத்தீவில் படைக்கருவிகள் மௌனிக்கப்பட்டன. இந்த அமைதி ஐரோப்பியப் பாராளுமன்றத்தின் ஒருதலைப்பட்ச நடவடிக்கையால் கலைக்கப்பட்டது. டப்பிளினில் நடைபெற்ற மக்கள் தீர்ப்பு மன்றமும் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளது.

2009 மே முதல் தமிழர்களின் படைகருவிகள் மட்டும் மௌனிக்கப்பட்டுள்ள நிலைமையில் தமிழீழ மக்கள் சிங்கள இனத்தின் சகல ஒடுக்குமுறைக்கும் உள்ளாக்கப்பட்டுவருகின்றனர். தாய்நாட்டில் மட்டுமன்றி புலம்பெயர் தேசங்களிலும் இன்று சிங்களத்தின் தமிழினம் மீதான தாக்குதல்கள் இடம்பெறுகின்றன.

இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனமாகத் தமது பூர்வீக தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன், அந்நிய சக்திகளிடம் அவர்கள் இழந்த இறைமையை மீளப்பெற்று, அமைக்கும் சுதந்திரத் தமிழீழத்தில் அவர்களை வாழ அனுமதிக்கும் நாள்வரை சிங்கள தேசத்தின் சுதந்திரநாள் கரிநாளாகவே கருதப்படும்.

இன்று டென்மார்க்கில் வாழும் புலம்பெயர் தமிழீழமக்கள் சார்பாக, தற்சமயம் தமிழ் பேசும் மக்களின் சுதந்திர போராட்ட வடிவங்கள் மாறியுள்ள நிலையிலும், தாயகத்தில் முழு இனமும் அடிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் தமிழ் பேசும் மக்களை தன்மானத்தோடு அவர்களது பூர்வீக தாயகத்தில் வாழவைக்க வேண்டிய பொறுப்புடனும், கடமையுடனும் சிங்களத்தின் சுதந்திர நாளும் தமிழர் வாழ்வின் கரிநாளுமான இன்று கீழ்வரும் தீர்மானங்களை அனைத்துலக குமுகத்திடமும் வைக்கின்றோம்.

- இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் ஓர் தேசிய இனமாக தமது பூர்வீக தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழவேண்டுமானால் அது அன்னிய சக்திகளிடம் அவர்கள் இழந்த இறைமையை மீளப்பெற்று அமைக்கும் சுதந்திர தமிழீழத்தில் தான் முடியும்.
- 2009 வரை நடைபெற்ற தமிழர்களின் நியாயமான போராட்டங்களை சிங்கள பேரினவாதம் மாபெரும் சக்திகளின் துணைகொண்டு ஒடுக்கியது. இன்று தமிழ் மக்கள் உறவுகளையும், வாழிடங்களையும் இழந்து அகதிகளாக்கப்பட்டு சொல்லொணா வேதனைகளுடன் இருக்கும் அவர்களின் எதிர்காலம் வாழ்விற்கு அனைத்துலக குமுகம் வழிவகுக்க வேண்டும்.
- தமிழ் மக்கள் தமது வாழிடங்களில் சுதந்திரமாகவும், தமது உரிமைகளுடனும் வாழ்வதற்கு அனைத்துலக குமுகம் நியாய வழியில் ஏற்பாடு செய்யவேண்டும்.
- சிங்கள பேரினவாதத்தினால் 1948 ல் இருந்து படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதியை வழங்க, படுகொலைகளுடன் தொடர்புடையவர்களை அனைத்துலக நீதிமன்றத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்க அனைத்துலகம் முன்வரவேண்டும்.
- போர்க்கைதிகள் என்ற போர்வையில் தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் போராளிகளை அனைத்துலக சட்டங்களின் அடிப்படையில் அவர்களை விடுவித்து, அவர்களுக்கான வாழ்விற்கு வழியமைக்கவேண்டும்.
- குருட்டுத்தனமான மதவாத பயங்கரவாதத்திற்கும் தமிழ் மக்களினது சுயநிர்மைக்கான விடுதலைப் போராடத்திற்குமான வேறுபாட்டை புரிந்துகொண்டுள்ள அனைத்துலக குமுகம் தமிழர்விடுதலைப் போராட்டம் மீதான தேவையற்ற பயங்கரவாதம் என்ற அவப்பெயரை உடனடியாக நீக்கவேண்டும்.
- புலம்பெயர் தமிழர்களை சிறிலங்காவின் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாக்க அனைத்துலக குமுகம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

டென்மார்க் தமிழர் பேரவை
**Dansk Tamilsk Forum**
**Denmark Tamils Forum**

v/Santhos Manokaran
Fredensgade 1. st.
6000 Kolding
CVR.nr.: 32610447

Tlf.: +4552173671 telefon tid: 10-12 og 19-22
Web: www.dansktamilskforum.dk
Mail: forum@dansktamilskforum.dk
**Bank:**
Sparekassen:Reg.nr.: 9690 Konto: 0000591807

- 1948 ம் ஆண்டு முதல் தமிழர்கள் பல முறை சிங்களத்தின் இனப்படுகொலைக்கு உள்ளாகியுள்ளபோதும் 2009 ம் ஆண்டு இனப்படுகொலை, இனப்படுகொலையின் உச்சநிலையை சிங்களம் தமிழர் மீது புரிந்தது. 400.000 மேற்பட்ட தமிழர்கள் வாழ்ந்த வன்னிமண்ணில் இருந்து தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டு சிங்களத்தின் வதைமுகாம்களில் 300000 மக்கள் அடைக்கப்பட்டனர். மிகுதி 100.000 மக்களும் எங்கே என்ற கேள்வி அனைத்துலக சமூகத்தால் சிறிலங்காவிடம் கேட்கப்படவேண்டும்.
- சிறிலங்காவின் தமிழர்களின் தேசத்தை சிங்களமாக்கும் முயர்சிக்கு அனைத்துலக சமூகம் உதவிடக்கூடாது.

**Billund d. 4. februar 2010**

அன்பார்ந்த டென்மார்க் வாழ் தமிழீழமக்களே!

தமிழினத்தின் இழந்த இறைமையை மீளப்பெற்றிட குரல்கொடுப்பதுடன், தமிழர் நிலத்தை சிங்கள தேசம் வன்பறிப்பு செய்த நாளாம் பெப்ரவரி 4ம் நாளைக் கரிநாளாக நினைவுகூருவோம்.!

சிங்கள தேசம் தமிழர் மீது நடாத்தும் இனப்படுகொலையை டென்மார்க் வாழ் மக்களுக்கு அம்பலப்படுத்துவோம்.!

எமது நிலம் எமக்கு வேண்டும் என ஒன்றாய்க் கூடிக் குரல்கொடுப்போம்!

எமது இலட்சியத்தில் நியாயமுள்ளது!, எமது உடலில் உண்மையின் பலமிருக்கிறது! நாம் வீழமாட்டோம். எத்தனை முறை விழுகிறோம் என்பது முக்கியமல்ல. அத்தனை முறையும் எழுந்திருக்கிறோம் என்பது தான் முக்கியம்! ஆம் நாம் விழ விழ எழுவோம.!

தமிழர்களின் தாகம் தமிழீழத் தாயகம்

அரசியல் விவகாரக்குழு
டென்மார்க் தமிழர் பேரவை
டென்மார்க்
politik@dansktamilskforum.dk